தெய்வம்:சென்னை, மயிலைக் கற்பகாம்பாள்

இயற்றியவர்: பாபநாசம் சிவன்

ராகம்: கல்யாணி, தாளம்: ஆதி

Papanasam Shivan’s song upon Devi in Kalyani raagam

Pallavi

உனை அல்லால் வேறே கதி இல்லை அம்மா!
உலகெல்லாம் ஈன்ற அன்னை

unnai allaal way ray gathi ellai amma!
ulagayl laam eendra annai

***

Anupallavi

என்னை ஓர் வேடமிட்டுலக நாடக
அரங்கில் ஆட விட்டாய் - அம்மா
இனி ஆட முடியாது! - என்னால்
இனி ஆட முடியாது, திருவுள்ளம் இரங்கி
ஆடினது போதும் என்று ஓய்வளிக்க [உனை]

ennai or way da mittulaga naadaka
arangil aada vittai amma
eni aada mudiyaathu - ennaal
eni aada mudiyaathu thiru ullam erange
aadinadhu podhum endru oaivalika

***

Charanam

நீயே மீனாக்ஷி, காமாக்ஷி, நீலாயதாக்ஷி
எனப் பல பெயருடன் எங்கும் நிறைந்தவள்
என் மனக் கோயிலினில்
எழுந்தருளிய தாயே!
திருமயிலை வளரும் [உனை]

neeye Meenakshi Kamakshi Neelayadaakshi
ena pala payarudan engum neraindhaval
en mana koilil
ezhundharuliya thaaye
Thirumailai valarum